கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 500 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (26.09.2023) தருமபுரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். இவ்விழாவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ். செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கானா நாட்டில் நடைபெறவுள்ள 66வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னை விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் (26.09.2023) புறப்பட்டார். சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப், 28- அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தமிழ் நாடு அரசுப் போக்குவரத் துக் கழகம் (கும்ப)லிட் அரியலூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத் தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்கு வரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகை யில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத் தின் சார்பில் பொது மக்க ளின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங் கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்ப டையில் நேற்றைய தினம் பொதுமக்களின் கோரிக் கைக்கு ஏற்ப வரதராஜன் பேட்டை தென்னூரிலி ருந்து சென்னைக்கு புதிய பேருந்து வழித் தடத் தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும், இந்த அரசுப் பேருந்து தடம் எண் 171P, 171D தென்னூர் சென்னை வழிதடத்தில் வரதராஜன்பேட்டை, ஆண்டிமடம், விருத்தா சலம் ஆகிய பகுதிகளை தொட்டு இயக்கப்படும். இப்பேருந்து காலை 8.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப்பட்டு மாலை 3.15 மணிக்கு சென்னையை சென்றடை யும். இதேபோன்று மாலை 4.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப் பட்டு இரவு 11.00 மணிக்கு சென்னையை சென்றடையும் வகையில் 2 அரசுப் பேருந்துகள் மூலம் தினசரி 2 நடைகள் இயக்கம் செய்யப்படுகி றது. இதன் மூலம் இப்ப குதி பொதுமக்கள், வியா பாரிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மிகுந்த பயனடைவார் கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்ப டுத்திக் கொள்ள வேண் டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், கோட்டாட்சியர் பரிம ளம், ஒன்றிய கழக செய லாளர்கள் ரெங்க.முரு கன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூரியகதிரவன், மண் டல தலைவர் சேகர், தொ.மு.ச. தலைவர் கொளஞ்சி, மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், தமிழ்நாடு அரசு போக் குவரத்துக் கழக ஊழியர் கள் மற்றும் அரசு அலுவ லர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் இதழியலின் முன்னோடி - தமிழ்ச் சமுதாயத்துக்கு

சி.பா.ஆதித்தனாரின் பணியை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!

119வது பிறந்த தினத்தை முன்னட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 28- தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார்

அவர்களது 119 ஆவது பிறந்தநாளில் தமிழ்ச் சமுதாயத்துக்காக அவர் ஆற்றிய பணிகளையும் - தமிழ் இதழியலுக்கு அவர் அளித்த பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்று கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா!

கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

அமைச்சர் தங்கம் தென்னரசு - திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! தலைமை : சு.சுப்பிரமணியன்!

நெல்லை.செப்.28- முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர தி.மு.க. தொண்ட ரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழா மாபெ ரும் பொதுக்கூட்டம் மற் றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 30.09.2023 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் மேலப்பா ளையம் பஜார் திடலில் நெல்லை மாநகர செயலா ளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப் துல் கையூம்,மேலப்பாளை யம் பகுதி துணை செயலா ளர் ஆமினாபீவி,மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ரம்ஜான் அலி,மாநகர தொழிலாளர் அணி சாகுல்ஹமீது,தொ. மு.ச. சைபுதீன், வட்ட செயலாளர் காஜாமுகை தீன் ஆகியோர் முன்னிலை யில் நடைபெறு கிறது.

மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக், தொண்டரணி துணை அமைப்பாளர் ரகு மான்ஷா ஆகியோர் வர வேற்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை கழக வழக் கறிஞர் முகம்மது நயி னார்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான்,வழக்கறி ஞர் முத்துக்குமார் ஆகி யோர் தொகுத்து வழங்கு கின்றனர்.

இந்நிகழ்வில் நிதி மற் றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்ன ரசு,மாநில கொள்கை பரப்புச் செயலாளர்,தமிழ் நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் பங் கேற்று சிறப்புரையாற்று கின்றனர்.

நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார் வையாளர் வசந்தம் ஜெயக் குமார், நெல்லை நாடாளு மன்ற உறுப்பினர் ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வஹாப், தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதா ராமன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யா னந்த்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநகராட்சி மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பெருமாள்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் லெட்சும ணன்,பேச்சிப் பாண்டி யன்,பகுதி கழக செயலா ளர்கள் துபாய் சாகுல் (மேலப்பாளையம்) சுப்பிர மணியன்(தச்சை)நமச்சிவா யம் (நெல்லை)அன்டன் செல்லதுரை (பாளை) ஒன் றிய செயலாளர்கள் அருள் மணி,மாரியப்பன்,அன்பழ கன்,பேரூர் செயலாளர் பேச்சிகுட்டி,மற்றும் மாவட்ட கழக நிர்வாகி கள், மாநகர கழக நிர்வாகி கள்,மேலப்பாளையம், பாளை, பகுதி கழக நிர்வா கிகள்,மண்டல தலைவர் கள், கழகப் பேச்சாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகர பிரதிநிதி கள், சார்பு அணி அமைப்பாளர் கள்,நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர் கள்,மேலப்பா ளையம், நெல்லை பேட்டை, தச்சை,பாளை, வட்ட கழக செயலாளர் கள் மேலப்பாளையம் நிர் வாகிகள், கழக முன்னோ டிகள்,பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேலப்பாளையம் இளை ஞரணி தர்வேஸ் அப்துல் காதர் விளையாட்டு மேம் பாட்டேனே சிவராம் முத் துராமன் ஆகியோர் நன்றி யுரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,மாநகர தொண்ட ரணி அமைப்பாளர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சித் திக் ஆகியோர் செய்துள் ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை பொன்.தருமராஜன்
செப்டம்பர் 28 (1989)

கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தஞ்சை நகரத்தில் வட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து போட்டியிட்டவரிடம் பணியாற்றி வந்த இவர், தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, கலைஞர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

தஞ்சை நாட்டு செக்கு தொழிலாளர் சங்க தலைவராகவும், மாவட்ட சினிமா ஆபரேட்டர்கள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முதல்வரின் உத்தரவுப்படி - சென்னை மாநகரில்

சாலை சீரமைப்புப் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை!

மண்டல வாரியாக ஆய்வு!

சென்னை, செப்.28- தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள்19-09-2023அன்று நடைபெற்றவடகிழக்குபரு வமழை ஆய்வுக்கூட்டத் தின் போதும், 21-09-2023 அன்றுநடைபெற்றகளஆய் வின் போதும் பெருநகர சென்னை மாநகராட்சி மற் றும்அதனைசுற்றியுள்ளபகு திகளில்சாலைப் பணிகளை விரைந்து மற்றும் தரமாக முடிக்கவும், தலைமைச் செயலாளர் தலைமையில் அவ்வப்போது ஆய்வுக்கூட் டம் நடத்தி கண்காணிக்க வும்அறிவுறுத்தினார்.அதன டிப்படையில், தலைமை செயலாளர் 22-09-2023 அன்றுசென்னைமற்றும்புற நகர்பகுதிகளில்மேற்கொள் ளப்பட்டு வரும் சாலைப்ப ணிகள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி, நக ராட்சி நிர்வாகம், நெடுஞ் சாலை துறை மற்றும் சேவைத் துறைகளிடம் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் முதல மைச்சரின் செயலர்1 / கூடு தல்தலைமைச்செயலாளர், கூடுதல்தலைமைச்செயலா ளர் / தலைவர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழகம், பெருநகர சென்னைமாநகராட்சியின் கூடுதல்தலைமைச்செயலா ளர் / ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, முதன்மைச்செயலாளர், நக ராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறை, கூடு தல் மாநகர காவல் ஆணை யர் (போக்குவரத்து) முதன் மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், சென்னைமெட்ரோஇரயில் நிறுவனம், சென்னை பெரு நகரகுடிநீர்வழங்கல்மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர், இணை ஆணையர் (பணிகள்) மற் றும்வட்டாரதுணைஆணை யர்கள்,பெருநகரசென்னை மாநகராட்சி மற்றும் பல் வேறு துறை அரசு அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பெரு நகரசென்னைமாநகராட்சி, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்றுவரும்சாலைப் பணிகள்குறித்துஆய்வுசெய் தார்கள்.

தலைமைச் செயலாளர் மண்டலம்வாரியாகசேவை துறையில் மேற்கொண்டுவ ரும்சாலைவெட்டுபணிகள் குறித்தும், சென்னைகுடிநீர் வாரியம் சாலை வெட்டு முடிக்கப்பட்டஇடங்களில் சாலைகளை சீரமைக்கவும், புதிய சாலைகளை புனர மைக்கவும்அறிவுறுத்தினார் கள். மேலும், சாலை வெட் டுகளில் உள்ள ஒட்டுப்பணிகளைவிரைந்து முடிக்கவும் அறிவுறுத்தி னார். மேலும்,சேதமடைந்த சாலைகளைபுதுப்பிக்கமண் டல வாரியாக குறுகிய கால ஒப்பந்தம் மூலம் சாலை பணிகளை விரைந்து முடிக் கு மாறு அறிவுறுத்தினார் கள். இப்பணிகளுக்கு பரப் பளவு அடிப்படையில் அல்லாமல், கொள்ளளவு அடிப்படையில், தேவைக் கேற்ப உடனடியாக ஒப்பந் தபுள்ளிகள்கோரவும்,இறுதி செய்யவும், பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

குறிப்பாகமண்டலம்2,7, 11, 12 மற்றும் 14 ஆகிய பகு திகளில் அதிகளவில் சாலை வெட்டு பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதால், மேற்கண்ட முறையில் ஒப் பந்தபுள்ளிகள் கோரி, பணி களைவிரைந்துமுடிக்குமாறு அறிவுறுத்தினார்.சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரி யத்தால் சாலை வெட்டுக் கள் முடிக்கப்பட உள்ள இடங்களில்சீரமைக்கப்பட வுள்ள 140 சாலைகளிலும் மற்றும் சாலை வெட்டு சீர மைக்கும் பணி நடைபெற் றுக் கொண்டிருக்கும் 277 சாலைகளிலும் துரிதமாக அக்டோபர் 10க்குள் முடிக் குமாறு அறிவுறுத்தினார்.

சென்னை பெருநகர குடி நீர் வழங்கல் மற்றும் கழிவுநீ ரகற்று வாரியத்தால் துவங் கப்பட்டு மேற்கொள்ள ப்பட்டு வரும் சாலை வெட்டு பணிகளை 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள். இது தவிர வேறு எந்த சாலை வெட்டுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார் கள். மேலும், சாலை பணி களைதரமாகவும், விரைவா கவும் முடிக்க ஏதுவாக தொழில்நுட்பஉதவியாளர் கள் அல்லது PMC மூலமாக பணியாளர்களை நியமிக்க வும், பணிகளை விரைந்து முடிக்குமாறும் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தி னார்.

மதுரை மாநகர் - காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளர்

எம்.எஸ்.தெட்சிணாமூர்த்தி மறைவு!

கோ.தளபதி எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

மதுரை, செப். 28- மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. முன் னாள் மாமன்ற உறுப்பினர் முன்னாள் வட்டப் பிரதி நிதி, முன்னாள் வட்டச் செயலாளர், தற்போது காமராஜபுரம் பகுதிக் கழ கச் செயலாளர் எம்.எஸ். தெட்சிணாமூர்த்தி நேற்று (27/09/2023) காலை 5.00 மணியளவில் உடல்நலக்கு றைவு காரணமாக இயற்கை எய்தினார் என்ற

செய்தியை மிகுந்த மனவே தனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது இழப்பு ஈடு செய்ய முடியா தது.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழகச் செயலா ளர் கோ.தளபதி எம். எல்.ஏ. மற்றும் மாவட்ட, வட்ட, பகுதிக் கழக நிர்வா கிகள் அன்னாரது உட லுக்கு மலர் மாலை அணி வித்து மரியாதை செய்தனர்.

மறைந்த எம்.எஸ்.தெட் சிணாமூர்த்திக்கு டி.தங்கம் என்கிற மனைவியும் டி.புவ னேஸ்வரி என்கிற மகளும் உள்ளனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு!

திருச்சி மத்திய மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ஜான்சன்குமார் அவர்கள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்ப டும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப் பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற் காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.9.2023

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வல்லன்குமாரன்விளை பகுதியில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் கருந்தளம் அமைக்கும் பணி மற்றும் சுவாமி விவேகானந்தர் தெரு, காந்தி நகர், வடக்கு சூரங்குடி பள்ளி வாசல் முன்புள்ள சாலை, வசந்த் நகர் எம்.கே. தெரு, பைத்தும்மால் நகர் ஆகிய பகுதிகளில் ரூ. 31.25 லட்சம் மதிப்பீட்டில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் திருமதி. ம.மேரிபிரின்ஸி லதா, மண்டல தலைவர் திருமதி. கு.அகஸ்டினா கோகிலவாணி, மாநகராட்சி இளநிலை பொறியாளர் ராஜா, சுகாதார ஆய்வாளர்கள் பகவதி பெருமாள், ராஜேஷ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சொர்ணத்தாய், திருமதி. ஜெனிதா, நவீன்குமார், வீரசூரபெருமாள், தி.மு.க. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.